DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 419 / 2013 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 6 |
| Name | திரு. டாக்டர் உதயகுமார் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | மூத்த உதவி பேராசியர், சட்ட சார்ந்த மருத்துவ துறை, TKMCH |
| Religion | |
| Age | |

**<u>(1 ஆம் எதிரி ஆஜர் – 2 ஆம் எதிரி ஆஜரில்லை: 2 ஆம் எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 09-06-2026.(நேரம்: 12.17PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரியில் மூத்த உதவி பேராசிரியராக சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பணி செய்து வருகிறேன்

2. கடந்த 17.08.2013 அன்று ஏரல் காவல் நிலைய வழக்கு எண் 254/2013 வழக்கில் சம்மந்தப்பட்ட முருகேசன் ஆண் வயது 25 என்ற நபரின் பிரேதத்தை பிணக்கூராய்வு செய்யவேண்டி வேண்டுகோள் கடிதம்பெற்று அன்று மதியம் 03.30 மணியளவில் பிணக்கூராய்வு மேற்கொண்டேன்.

3. ஆய்வில் உடல் முழுவதும் பிண விரைப்பு தன்மை காணப்பட்டது.

4.உடல் மிதமான போஸக்கூடன் காணப்பட்டது. கை, கால் விரல்கள் நீல நிறத்தில் காணப்பட்டன.

4.உறைந்த ரத்தகறைகள் முகம் மற்றும் நெஞ்சு பகுதியில் காணப்பட்டது.

5.உறைந்த ரத்தக்கட்டிகள் மூக்கு மற்றும் காதுகளில் காணப்பட்டது.

6.கீழ்கண்ட இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் உடலில் காணப்பட்டன.

1. 5 CM X3 CM அளவிலான சிராய்ப்பு காயம் இடது கன்னத்தில் காணப்பட்டது.

2. 2 CM X1 CM அளவிலான சிராய்ப்பு காயம் இடது காரை எலும்பின் உட்பகுதியில் காணப்பட்டது.

3. 4 CM X2 CM அளவிலான சிராய்ப்பு காயம் இடது பக்க கழுத்து பகுதியில் காணப்பட்டது.

4. 4 CM X1 CM அளவிலான சிராய்ப்பு காயம் வலது கன்னத்தில் காணப்பட்டது.

5. 5 CM X2 CM X எலும்பு அளவு ஆழமுடைய கிழிந்த காயம் வலது பக்க கபாலத்தின் பக்கவாட்டு பகுதியில் காணப்பட்டது. அதன் அடியில் உள்ள எலும்பு முறிந்த காணப்பட்டது.

6. 3 CM X2 CMX எலும்பு அளவு ஆழமுடைய கிழிந்த காயமானது காயம் எண் 5ல் இருந்து 2 CM கீழே காணப்பட்டது.

7. 3 CM X2 CM X தசையளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது காதின் பின்பகுதியில் காணப்பட்டது.

8. வலது கன்னத்தில் உள்ள எலும்பு முறிந்து காணப்பட்டது.

9.கபாலம் , கபால தோள், கபால எலும்பு, மூளையை சுற்றிய சவ்வு ஆகியவற்றை பகுப்பாய்வு செய்ததில் 25 CM X 10 CM அளவிலான கன்றிய காயம் வலது பக்க கபாலத்தின் பக்கவாட்டு மற்றும் பின்பகுதியில் காணப்பட்டது.

10.வலது கபாலத்தின் பக்கவாட்டு பின்பகுதி கபால எலும்புகள் பல்வேறு துண்டுகளாக முறிந்து காணப்பட்டது.

11.மூளையை சுற்றிய நடுசவ்வின் கீழ்புறத்தில் வலது மூளையின் பக்கவாட்டு பின்பகுதி மற்றும் சிறுமூளையை சுற்றி ரத்தம் பரவலாக கசிந்து காணப்பட்டது.

12.கபாலத்தின் அடிப்பகுதி எலும்புகள் முறிந்து காணப்பட்டது.

13.உள்ளுறுப்புகள்

வயிற்று அறை, நெஞ்சறை காலியாக இருந்தது.

இருதயத்தை சுற்றிய சவ்வில் 10 ML அளவுடைய வெளிர் மஞ்சள் திரவம் காணப்பட்டது.

இருதயம் சாதாரணமாகவும், அதன் அறைகள் காலியாகவும் காணப்பட்டன.

அதன் தமனி சாதாரணமாக காணப்பட்டது.

மூச்சு குழல் மற்றும் உணவு குழல் சாதாரணமாக காணப்பட்டது.

நாவடி எலும்பு சாதாரமாக காணப்பட்டது.

கல்லிரல், சிறுநீரகங்கள், நுரையீரல், மண்ணீரல் , சாதாரணமாகவும், அதன் வெட்டு தோற்றம் ரத்தம் செறிந்தும் காணப்பட்டன.

வயிற்றில் 250 கிராம் அளவுடைய பகுதி செரிமானமான உணவு பொருள் எவ்வித நெடியும் இன்றி காணப்பட்டது. அதன் சவ்வு ரத்தம் செறிந்து காணப்பட்டது.

சிறுகுடலில் 100 கிராம் அளவுடைய பகுதி செரிமானமான உணவு பொருள் எவ்வித நெடியும் இன்றி காணப்பட்டது. அதன் சவ்வு ரத்தம் செறிந்து காணப்பட்டது.

சிறுநீர் பை காலியாக இருந்தது.

மூளை சாதாரணமாக காணப்பட்டது.

வெளிப்புற பிறப்புறுப்புக்கள் சாதாரணமாக காணப்பட்டது.

ஆதலால் அவருக்கு ஏற்பட்ட தலை காயத்தின் விளைவாக பிரேத பரிசோதனைக்கு 12 லிருந்து 24 மணி நேரத்திற்குள் அவர் இறந்திருக்கலாம் என்று நான் வழங்கிய முருகேசன் என்பவரின் பிணக்கூராய்வு சான்று **அசாஆ 3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

**7.** இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை(நேரம் 12.36PM)**

1. என்னிடம் பிரேத பரிசோதனைக்காக இறந்தபோன நபரை கொண்டுவந்தபோது எத்தனை மணி இருக்கும் என்று கேட்டால் மாலை 3.15 மணிக்கு வேண்டுகோள் கடிதம் பெற்று 03.30 மணிக்கு பிணக்கூராய்வு செய்ய ஆரம்பித்தேன்.

2.இறந்துபோன நபர் எந்த தேதியில், எத்தனை மணிக்கு எதனால் இறந்தார் என்று காரணம் கேட்டேனா என்றால் பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தில் வழக்கின் வரலாறு தெளிவாக கூறப்பட்டுள்ளது.

3.வழக்கின் வராறுப்படி விபத்து எப்போது ஏற்ப்பட்டது என்றால் 16.08.2013 மதியம் 03.00 மணிக்கு ஏற்பட்டது.

4.பிரேத்தத்தை என்னிடம் கொண்டுவரும் முன்பாக இறப்பதற்கு முன்பாக அந்த நபரை வேறு ஒரு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்களா என்றால் ஆத்தூர் சங்கர் மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள். அவர் இறப்பிற்கு பின்பு பிணக்கூராய்வு செய்வதற்காக தூத்துக்குடி மருத்துவமனைக்கு வந்தார்கள்.

5.ஆத்தூர் சங்கர் மருத்துவமனையில் இறந்துபோன நபருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அறிக்கை எதுவும் தரப்பட்டதா என்றால் அவர் இறந்துபோனதாக மட்டுமே தகவல் தெரிவிக்கப்பட்டது. அறிக்கை எதுவும் சமர்க்கிப்படவில்லை. ஆத்தூர் சங்கர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே முருகேசன் இறந்துவிட்டார்.

6.இறந்துபோன நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஒருநபர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது அவருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக கீழே விழுந்து மேலே சொன்னதுபோன்று காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.